10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 122 செவ்வாய்க்கிழமை செப்ரெம்பர் 19 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

# ஆஜர்!

## தொலைபேசித் தகவல்கள் மாயம்



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் இன்று பிணைமுறி மோசடிகள் சம்பந்தமாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகியுள்ளார்.

அர்ஜூன் மகேந்திரனிடம் விசாரணை செய்வதற்கு கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழு தீர்மானித்திருந்த நிலையில், இன்று ஆணைக்குழு முன் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அர்ஜூன் மகேந்திரனின் வாக்குமூலம் கட்டாயமானது என்பதால் அவரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, அர்ஜூன் மகேந்திரனால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு கையடக்கத் தொலைபேசிகளிலும், குறிப்பிடத்தக்க சில தகவல்கள் காணாமல் போயுள்ளதாக, பிணைமுறி தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது குறித்து அவரிடம் விளக்கம் கோரவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ)

# குண்டர் சட்டம் இரத்து

## விடுதலையாகிறார் திருமுருகன் காந்தி



குண்டர் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 'மே 17' இயக்கத்தைச் சேர்ந்த திருமுருகன் காந்தி உள்ளிட்டவர்களை விடுவிக்க உத்தரவிட்டுள்ள சென்னை உயர்நீதிமன்றம், குண்டர் சட்டத்தையும் இரத்துச் செய்துள்ளது.

இலங்கையில் இறுதி யுத்தத்தின்போது கொல்லப்பட்ட ஈழத் தமிழர்களுக்கான மெழுகுவர்த்தி அஞ்சலி நிகழ்வு சென்னை மெரீனா கடற்கரையில், கடந்த மே மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்டது. கடந்த ஏழு ஆண்டுகளாக குறித்த நிகழ்வுக்கு அனுமதித்துவந்த தமிழக அரசு திடீரென இந்த ஆண்டு அஞ்சலி நிகழ்ச்சிக்குக் கெடுபிடி செய்தது. நிகழ்வில் பங்கேற்றவர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

'மே 17' இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, டைசன், இளமாறன் மற்றும் அருண்குமார் ஆகிய நான்கு பேர் மட்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

06

# அரசியலமைப்புடன் 20 ஒத்துப்போகவில்லை

**உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டு**

20ஆவது திருத்தச் சட்டத்தின் சில பிரிவுகள் அரசியலமைப்புடன் ஒத்துப் போகவில்லை என, உயர் நீதிமன்றம் தெரியப்படுத்தியுள்ளது.

இதனை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார். 20ஆவது திருத்தம் தொடர்பான நீதிமன்ற அறிவிப்பை வெளியிடுவதற்காக பெரும் எதிர்பார்ப்புக்களுடன் இன்றைய அமர்வு பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பித்த போதே சபாநாயகர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன்,

06

# டெங்கு ஒழிப்பு வாரம் நாளை ஆரம்பம்

நாடளாவிய ரீதியில் நாளை முதல் டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரம் இடம்பெறவுள்ளது.

பருவப் பெயர்ச்சி மழை காரணமாக டெங்கு நுளம்புகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அடையாளம் காண்பது மிகமுக்கியமானதாகும்.

இம்முறை 188 பிரதேச சுகாதார அதிகார பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் தேசிய இணைப்பாளரும் விசேட வைத்தியருமான ஹசித்த திசேரா தெரிவித்தார்.

டெங்கு நோயினால் இவ்வாண்டில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 51 ஆயிரத்து 975 ஆகும். இதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 390 ஆகும். இறந்தவர்களில் 68 சதவீதமானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு விசேட டெங்கு ஒழிப்புத் திட்டத்தினை முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் அ.வேதநாயகன் குறிப்பிட்டுள்ளார். (உ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரமும் ஒத்திவைப்பு!



20 ஆவது திருத்தச்சட்ட வரைவு குறித்தும் விவாதம் நடத்துவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் சர்வதேசப் பிரகடனம் தொடர்பான விவாதம் நாளை மறுநாள் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த சர்வதேசப் பிரகடனம் நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்று முன்னர் அரசாங்கம் அறிவித்திருந்தது. எனினும் இது குறித்து விவாதிக்கப்படாது என்று அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

06

# கலைகிறது கிழக்கு அவை?

கிழக்கு மாகாண ஆட்சி ஒக்ரோபர் முதல் வாரம் கலைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கிழக்கில் மீண்டும் புதிய ஆட்சி அமையும் வரை அம்மாகாணசபை

06

# பயங்கரவாத வழக்குகள் விரைவில் முடிவுபெறும்



பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளை துரிதப்படுத்துவதற்குச்சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். சிறிலங்கா பவுண்டேசனில் நேற்று இடம்பெற்ற தேசிய சிறைக் கைதிகள் நாள் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 73 பேரின் வழக்குகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, சட்டமா அதிபர் என்னிடம் உறுதியளித்துள்ளார். இந்த வழக்குகளை நாளாந்த அடிப்படையில் விசாரிக்குமாறு தாம் அழுத்தம் கொடுக்கப் போவதாகவும், ஏதாவது வழக்கு விசாரணைகள்

06

# 20 ஆம் திருத்தத்துக்கு மத்திய மாகாணம் ஆதரவு

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவது தொடர்பான, 20வது திருத்தச் சட்டத்துக்கு மத்திய மாகாண சபையில் ஆதரவளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனை அம் மாகாண சபையில் 31 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த யோசனைக்கு ஆதரவாக 40 வாக்குகளும் எதிராக 9 வாக்குகளும் கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கமைய, கிழக்கு உள்ளிட்ட ஐந்து மாகாண சபைகள் இதுவரை, குறித்த சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளன. வடக்கு உட்பட நான்கு மாகாணசபைகள் குறித்த சட்டமூலத்தை நிராகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஒரு நாள் காய்ச்சல் 9 வயது சிறுமி மரணம்

கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சந்திவெளி, பாலையடித்தோணா கிராமத்தில் 9 வயதுச் சிறுமியொருவர், ஒரு நாள் பீடித்த காய்ச்சலால் மரணமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில், பாலையடித்தோணா - 9 ஐச் சேர்ந்த அற்புதன் கிதுஷா எனும் சிறுமியே மரணித்துள்ளார்.

இச்சிறுமிக்கு, சனிக்கிழமை கடும் காய்ச்சல் வந்ததையடுத்து, உடனடியாக சந்திவெளி பிரதேச வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளார். ஞாயிற்றுக்கிழமை நண்பகலளவில் சிறுமிக்கு காய்ச்சல் குறைந்திருந்த போதும் வாந்தி, குமட்டல், ஏற்பட்டதோடு, வாயிலிருந்தும் நாசியிலிருந்தும் சளி வெளிவந்ததோடு சிறுமி சோர்வடைந்து மயக்கமாகிய நிலையில் உடனடியாக மீண்டும் சந்திவெளி பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

எனினும், செல்லும் வழியிலேயே, சிறுமி உயிரிழந்துள்ளார். இதேவேளை இச்சிறுமியின் தாயாரான கிருபைராணி வீட்டுப் பணிப்பெண்ணாக மத்திய கிழக்குக் சென்றுள்ள நிலையில், பாட்டியின் பராமரிப்பிலேயே சிறுமி இருந்து வந்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)



## சங்கானை மண்டிகைக்குளம் புனரமைப்புப் பணி ஆரம்பம்

சங்கானை மண்டிகைக்குளம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதுடன் குறித்த குளத்தை மையப்படுத்தி அப்பிரதேசத்தைச் சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போது இந்த மண்டிகைக்குளத்தை ரூபா 40 இலட்சம் செலவில் தொல்புரம் கமநல சேவை நிலையத்தால் ஆழமாக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த வேலைத்திட்டம் வலி.மேற்குப் பிரதேச செயலாளர் கமநல சேவைகள் திணைக்களத்துடன் இணைந்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் சமூக வழிகாட்டலின் கீழ் இடம்பெற்று வருகின்றன. இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் இந்தக் குளத்தின் மூலம் போதியளவு மழைநீரைத் தேக்கி வைத்துக் கொள்ள முடியும் எனக் கூறப்படுகின்றது. அத்தோடு குளத்தை அண்டிய வயல் தோட்டக்காணிகளுக்குத் தேவையான நேரத்தில் நீரைப் பெற முடியும். (உ)

## சூடான்-இலங்கை இராணுவ அதிகாரிகள் சந்திப்பு



சூடான் இராணுவத்தின் கூட்டுப்படைப் பயிற்சியின் மேஜர் ஜெனரல் இஸாம் முகமட் ஹசன் கரோர் தலைமையிலான மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சூடான் பிரதிநிதிகள் மற்றும் இராணுவப் படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர இடையில் சந்திப்பு இடம்பெற்றது.


இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சூடானின் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் இராணுவப் படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி பாதுகாப்புத் தொடர்பான முக்கியமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர். இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட இந்தச் சந்திப்பின் போது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சாத்தியக்கூறுகளை விசாரித்து இலங்கை இராணுவத்தின் சர்வதேச நிகழ்வுகளின் பங்கேற்றல் குறித்து மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர விளக்கினார். இந்த நிகழ்வினை நினைவுகூரும் வகையில் இவர்களிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டது.(உ)

## கிழக்குப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் உள்ளீர்ப்புப் பரீட்சை

கிழக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி மாவட்ட ரீதியில் பல பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கட்டம் கட்டமாக அனுப்பி வைக்கப்படுவதாகவும், விண்ணப்பித்த அனைவருக்கும் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும் எனவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்ததாக அம்பாறை மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தலைவர் பி.நசுறுதீன் கூறியுள்ளார். எனினும், இந்த அனுமதி அட்டைகள் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பெற்ற வர்த்தகப் பட்டதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தம்மிடம் பல முறைப்பாடுகள் வந்ததாகவும் இது தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ)

## கஞ்சா வைத்திருந்தவர் வவுனியாவில் கைது



வவுனியா - பாரதிபுரம் பகுதியில் கேரளா கஞ்சாவினை தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவர் நெளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று மாலை 4.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார். சாம்பல் தோட்டம் பகுதியிலிருந்து பாரதிபுரம் நோக்கி பயணித்த நபரிடம் கடமையிலிருந்த பொலிஸார் சோதனையிட்ட போது உடமையுடன் மறைத்து வைத்திருந்த கேரளா கஞ்சா பொதியினை கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் 34 வயதுடையவர் எனவும், இவர் எவ்வாறு கஞ்சாவினை பெற்றுக்கொண்டார் என்பது தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும், விசாரணைகளின் பின்னர் வவுனியா பொலிஸ் நிலையத்தினூடாக இந்த நபர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (உ)

## அறையில் கிடந்த ஆணின் சடலம்

ஏறாவூர் பொலிஸ் பிரிவு, வந்தாறுமூலைக் கிராமத்திலுள்ள வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலத்தை, நேற்றுத் திங்கட்கிழமை மாலை மீட்டெடுத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வந்தாறுமூலை பிரதான வீதியைச் சேர்ந்த மயில்வாகனம் ஸ்ரீதர் (வயது-55) என்பவரே, சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேற்படி சடலம், அவரது வீட்டின் வழிபாட்டு அறைக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது. அவர் மதுபோதையில் இருந்த நிலையில், வழிபாட்டறையைத் தாழிட்டுக் கொண்டு நெடு நேரமாக வெளியே வராமல் இருந்துள்ளார்.

இதனையடுத்து, உறவினர்கள் அயலவர்களின் உதவியுடன் தாழிடப்பட்டிருந்த அறையின் ஜன்னல்களை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்தபோது, சடலமாகக் கிடந்ததாக உறவினர்கள், பொலிஸாருக்கு வாக்குமூலமளித்துள்ளனர்.(உ)

## கரையோரப் பாதுகாப்புக்கு மக்கள் பங்களிக்க வேண்டும்

"கரையோரப் பாதுகாப்புக்குப் பொதுமக்களின் பங்களிப்பு அவசியம்" என கரையோரப் பாதுகாப்பு மற்றும்முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

நாட்டின் 25 நிர்வாக மாவட்டங்களில், 17 நிர்வாக மாவட்டங்கள் கரையோரங்களுக்கு உட்பட்டதாக அமைந்துள்ளன.

இதில் 75 சதவீதமானவற்றில் சுற்றுலாத் தொழில்த்துறைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. 70 சதவீதம் கடற்றொழிலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான நிலையில் கரையோரம் அசுத்தமடைவதற்கு இடமளிக்க முடியாதென்றும் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினர்.

சுற்றாடல் மற்றும் கடற்றொழில்த்துறையில் ஈடுபட்டுள்ளோர் கரையோரப் பாதுகாப்புத் தொடர்பில்கவனம் செலுத்த வேண்டுமென்றும் பணிப்பாளர் நாயகம் மேலும் வலியுறுத்தினர். (உ)



## ஹிட்லரின் கையெழுத்து 13000 டொலர்

ஜேர்மன் சர்வாதிகாரி அடல்ஃப் ஹிட்லர் கையெழுத்திட்ட 'மெயின் ஹாம்ஃப்' புத்தகம் அமெரிக்காவில் 13,000 டொலருக்கு ஏலம் போனது.
"போரில் மட்டுமே உன்னதமான மனிதன் பிழைப்பான்" என்ற வாசகத்துடன் அந்தப் புத்தகத்தின் முதற்பக்கத்தில் 1930, ஒகஸ்ட் 30 எனத் திகதியிட்டு ஹிட்லர் கையெழுத்திட்டுள்ளார்.மிகவும் அரிதான இந்தப் புத்தகத்தை மேரிலாண்டில் உள்ள செசாபிக் நகரில் அமைந்துள்ள அலெக் சாண்டர் வரலாற்று ஏல நிறுவனம் ஏலம் விட்டது.இதனை 13,000 டொலர் தொகைக்கு ஒருவர் ஏலம் எடுத்துள்ளார். அவர் எந்த நாட்டவர் என்ற தகவல் வெளியிடப்படவில்லை.
அதுமட்டுமன்றிஅவரது பின்னணியும் தெரிவிக்கப்படவில்லை.முன்னதாக இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லர் பயன்படுத்திய தொலைபேசி ஒன்று கடந்த பெப்ரவரி மாதம் சுமார் 240,000 டொலருக்கு ஏலத்தில் விலை போனது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து



பிரிட்டனில் தரையிறங்க முயன்ற இரண்டு பயணிகள் விமானம் ஒன்றன் மீது ஒன்றாக மோதுவது போல் நெருக்கமாக வானில் பறந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
லண்டனில் உள்ள ஹீத்ரு விமான நிலையத்தில் சில தினங்களுக்கு முன்னர் இரண்டு பயணிகள் விமானம் ஒரே நேரத்தில் தரையிறங்க வந்துள்ளன.
இரண்டு விமானங்களுக்கும் தரையிறங்க உடனடியாக அனுமதி கிடைக்காததால் அவை இரண்டும் வானத்தில் வட்டமிட்டபடியிருந்தன.அப்போது, கண் இமைக்கும் நேரத்தில் இரண்டு விமானங்களும் ஒன்றன் மீது ஒன்றாகப் பறப்பது போல் பறந்துள்ளன.இந்தக்காட்சியை விமான நிலையத்துக்கு அருகில் வசித்து வரும் கிறொஸ் ஹின்) என்பவர் தத்ரூபமாகப் படம் பிடித்துள்ளார்.இரண்டு விமானங்களிலும் சுமார் 500 பயணிகள் வரை பயணம் செய்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.கண் இமைக்கும் நேரத்தில் ஒரு பெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளதாக புகைப்படம் எடுத்த நபர் உணர்ச்சிகரமாகத் தெரிவித்துள்ளார்.
இதுக்குறித்து விமான நிலைய அதிகாரிகள் பேசியபோது, 'தற்போதைய நவீன காலத்தில் தொழில்நுட்பம் அதிகளவில் வளர்ந்துள்ளது.
விமானங்களில் எச்சரிக்கை விடுக்கும் அதிநவீன கருவிகள் உள்ளன.
வானத்தில் ஒரு குறிப்பிட்ட இடைவெளி தூரத்தில் மற்றொரு விமானம் வந்தால் அதனை வினாடிப் பொழுதில் எச்சரிக்கை விடுக்கும் கருவிகள் உள்ளன.
ஒவ்வொரு விமானமும் குறைந்தபட்சம் 1000 அடிகளுக்கு அருகில் பறப்பதற்கு வாய்ப்பில்லை. இந்த இரண்டு விமானங்களுக்கு இடைவெளி தூரமும் 1000 அடிகள் இருக்கும்.தரையில் இருந்து புகைப்படம் பிடித்ததால் இரண்டும் ஒன்றின் மீது ஒன்றாக பறப்பது போல் காட்சியளிக்கின்றன" எனத் தெரிவித்துள்ளனர். (இ)

## கணிணிக்குள் களவாணிகள்



சுவிட்சர்லாந்தில் இராணுவத்துக்குச் சொந்தமான கணினிகளுக்குள் நுழைந்த இணையக் களவாணிகள் பல இரகசிய தகவல்களைத் திருடியுள்ளனர்.
சுவிஸ் இராணுவ அமைச்சகம் வெளியிட்ட தகவலில், இணையத் திருடர்கள் புதிய மென்பொருளைப் பயன்படுத்தி கணனிகளுக்குள் நுழைந்துள்ளனர். இந்த மென்பொருளைப் பயன்படுத்தி அரசு, இராணுவம், தூதரகம் உள்ளிட்ட துறைகளுக்குச் சொந்தமான கணனிகளுக்குள் இணையத் திருடர்கள் நுழைந்து தகவல்களைத் திருடி வந்துள்ளனர்.
இந்தத்திருட்டு நடவடிக்கை பல ஆண்டுகளாக இரகசியமாக நிகழ்ந்து வந்துள்ளது. கடந்த ஜூலை மாதம் கண்டுபிடிக்கப்பட்டது.
இவ்விவகாரம் வெளியானதைத் தொடர்ந்து இராணுவ அமைச்சகத்துக்குச் சொந்தமான தகவல்கள் பாதுகாப்பாக உள்ளனவா எனத் தீவிர விசாரணை நடத்தப்பட்டுள்ளது. தற்போது இதுக்குறித்து சுவிஸ் இராணுவமும் மற்றும் வெளியுறவுத் துறை அலுவலகமும் தீவிர விசாரணை நடத்தி வருகிறது.சுவிஸ் இராணுவ கணிணிகளுக்குள் நுழைந்து தகவல்களை திருடுவது இது முதல் முறை அல்ல. கடந்தா 2016 ஆம் ஆண்டும் இராணுவக் கணினிகளில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் திருடப்பட்டனது.இதே போல், கடந்த 2012 ஆம் ஆண்டு இராணுவ ரகசியங்களைத் திருடிய கணிணி மேதை ஒருவர் அவற்றை விற்பனை செய்ய முயன்றபோது கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## குர்துகளுக்கு தனிநாடில்லை

**ஈராக் திட்டவட்டம்**

குர்து இன மக்களின் தனி நாட்டுக் கோரிக்கையை ஒருபோதும் ஏற்க முடியாது என்று ஈராக் அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.
ஈராக்கின் வடபகுதியில் குர்து இன மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். குர்திஸ்தான் என்றழைக்கப்படும் இந்தப் பகுதி ஈராக் ஆட்சியின் கீழ் தன்னாட்சி அதிகாரத்துடன் செயற்படுகிறது.
இந்த நிலையில் தனி நாடு கோரி குர்து இன மக்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதுதொடர்பாக வரும் 25ஆம் திகதி குர்திஸ்தான் பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுகிறது.
இதற்கு ஈராக் அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. குர்து இன மக்களின் போராட்டத்துக்கு இஸ்ரேல் ஆதரவு தெரிவித்துள்ளது.
இந்த விவகாரம் குறித்து ஈராக் பிரதமர் ஹைதர் அல்-பாக்தாதி கூறியபோது, "குர்து இன மக்கள் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அவர்கள் தீயோடு விளையாடுகிறார்கள். ஏதாவது பிரச்சினை எழுந்தால் இராணுவ ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் "என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். ஈராக் துணை அதிபர் நவுரி அல்-மாலிக் கூறியபோது, "குர்து இன மக்களின் தனி நாட்டுக் கோரிக்கையை ஒருபோதும் ஏற்க முடியாது. இரண்டாவது இஸ்ரேல் உருவாவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பொது வாக்கெடுப்புத் திட்டத்தை குர்து இனத் தலைவர்கள் கைவிட வேண்டும்" என்று தெரிவித்தார். (இ)

## 79 நாட்களில்



## உலகைச்சுற்றிய சைக்கிளோட்டி

பிரிட்டிஷ் பிரஜை ஒருவர் ,தனது மிதி வண்டியில் எழுபத்து ஒன்பது நாட்களில் உலகைச் சுற்றி முடித்து புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.
பிரபல எழுத்தாளர் ஜூல் வெர்னஸ் எழுதிய, "80 நாட்களில் உலக சுற்றும் பயணம்" என்ற புத்தகத்தின் மூலம் ஈர்க்கப்பட்ட மார்க் பீயுமண்ட் என்பவரே, தனது உலகச் சுற்றுப் பயணத்தை ஒரு நாளைக்கு முன்னதாக பரிஸில் முடித்துள்ளார்.
அவர் ஒரு நாளைக்கு 16 மணித்தியாலங்கள் சைக்கிளில் செலவிட்டு 380 கிலோ மீற்றர் தூரம் வீதம், பயணித்துத் தனது சுற்றுப்பயணத்தை நிறைவு செய்தார்.
இது போன்ற சைக்கிள் ஓட்டுதலில் மார்க் பீயுமண்ட் உலக சாதனை படைப்பது இது இரண்டாவது முறை. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு 194 நாட்களில் உலகச் சுற்றுப்பயணம் செய்த அவரது முன்னைய சாதனை மற்றொரு சாதனையாளரால் முறியடிக்கப்பட்டிருந்தது.
தற்போது மீண்டும் அந்தச் சாதனையைத் தன் வசமாக்கியுள்ளார் மார்க் பீயுமண்ட். (இ)

## ரோஹிங்யர்கள் தீவிரவாதிகள்

**இந்தியா சந்தேகம்**





"இந்தியாவில் உள்ள சில ரோஹிங்யா முஸ்லிம் அகதிகளுக்கும் மற்ற நாடுகளில் உள்ள கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தொடர்பு உள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. இது நாட்டின்பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது"என்று இந்திய மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.
உச்சநீதிமன்றத்தில் எழுத்துபூர்வமாக அளித்த மனுவில், இந்தியாவில் ரோஹிங்யாக்கள் சட்டவிரோதமாக நுழைவதை ஒழுங்கமைக்கும் பல முகவர்கள் ஒரு வலையமைப்பாகச் செயற்பட்டு வருவதாகவும் இந்திய அரசு குறிப்பிட்டுள்ளது.
கடந்த பத்தாண்டுகளில் ஐ.நா.மூலம் பதிவு செய்யப்பட்ட மற்றும் மியான்மரிலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவுக்கு வந்த நாற்பதாயிரம் முஸ்லிம் ரோஹிங்யாக்களை நாடு கடத்துவதற்கு இந்திய அரசு திட்டமிட்டிருந்தது.இந்த முடிவுக்கு எதிராக தொடங்கப்பட்ட வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றபோதே ரோஹிங்யாக்களுக்கும், தீவிரவாத அமைப்புகளுக்கும் தொடர்பிருப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

# பதற்றம் அதிகரிப்பு

## தொடரும் போர்ப் பயிற்சிகள்

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளை வடகொரியா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.தற்போது ஆறாவது முறையாக ஏவுகணைச் சோதனை நடத்தியுள்ள வடகொரியாவின் செயலால், அமெரிக்காவும் தென்கொரியாவும் போர்ப் பயிற்சியைத் தீவிரப்படுத்தியுள்ளன.இந்த நிலையில் குவாம் தீவில் இருந்து வந்த அமெரிக்காவின் குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு, ஜப்பானில் இருந்து வந்த ஜெட் விமானங்கள் நான்கு, தென்கொரியாவின் நான்கு விமானங்கள் என்பன இணைந்து குண்டு வீச்சு உள்ளிட்ட போர்ப் பயிற்சியில் ஈடுபட்டதாகத் தென்கொரியப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
அமெரிக்காவும் தென்கொரியாவும் மாதத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை போர்ப் பயிற்சியில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேபோல் ரஷ்யா, சீனாவுடன் இணைந்து வடகொரியாவின் எல்லை அருகே உள்ள விளாடிவோஸ்தோ துறைமுகத்தில் இந்த வருடத்தின் இரண்டாம் கட்டக் கடற்படைப் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், கொரிய தீபகற்ப பகுதியில் போர்ப் பயிற்சிகள் தொடர்ந்த வண்ணம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)





# தடை

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் தலைவரான வெய்ன் ரூனி கடந்த முதலாம்திகதி மது அருந்திவிட்டுக் கார் ஓட்டியதால் கைது செய்யப்பட்டு உடனடியாகப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு மான்செஸ்டரில் உள்ள நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நேரில் ஆஜரான வெய்ன் ரூனி, தனது தவறை ஒப்புக்கொண்டார்.

இதனை அடுத்து அவருக்கு வாகனம் ஓட்ட 2 ஆண்டுகள் தடை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன், அடுத்த 12 மாதங்களுக்குள் அவர் 100 மணி நேரம் சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

“அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டிய எனது தவறான முடிவுக்காக வெளிப்படையாக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். இது முற்றிலும் தவறானதாகும்” என்று வெய்ன் ரூனி சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# நவஜீவனைச் சாய்த்து காலிறுதியில் றோயல்!

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திவரும் ”யாழின் கில்லாடியார்“ உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற முக்கிய ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்று, காலிறுதிக்குள் நுழைந்தது.

நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் ஊரெழு றோயல் அணி, உடுப்பிட்டி நவஜீவன் அணியுடன் மோதியது.

ஆரம்பம் முதலே போட்டியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த றோயல் அணி, 4 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அந்த அணி சார்பாக கஜகோபன், எடிசன் ஆகியோர் தலா இரு கோல்களைப் போட்டனர். ஆட்டநாயகனாக கபில் தெரிவானார். (ஐ)



# அசைக்க முடியாத ராஜா

இருபது-20 கிரிக்கெட் தரவரிசை அணிகள் மற்றும் துடுப்பாட்டம், பந்து வீச்சாளர் என அனைத்துப் பிரிவுகளுக்குமான தரவரிசைப் பட்டியலைச் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று வெளியிட்டது.

இதன்படி அணிகள் தர வரிசையில் நியூஸிலாந்து அணி (125 புள்ளிகள்) முதலிடத்தில் தொடர்கிறது. பாகிஸ்தான் அணி (121 புள்ளிகள்) 2ஆவது இடத்துக்கு முன்னேறியிருக்கிறது. 2ஆவது இடத்தில் இருந்த இங்கிலாந்து அணி (119 புள்ளிகள்) 4ஆவது இடத்துக்குச் சரிந்துள்ளது. 4ஆவது இடத்தில் இருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி (120 புள்ளிகள்) 3ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறது. இந்திய அணி (116 புள்ளிகள்) 5ஆவது இடத்தில் தொடர்கிறது.

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை அணிகள் முறையே 6,7,8ஆம் இடங்களில் உள்ளன.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தர வரிசையில் இந்திய வீரர் விராட்கோலி (826 புள்ளிகள்) முதலிடத்தில் தொடர்கிறார். பந்து வீச்சுத் தர வரிசையில் பாகிஸ்தான் வீரர் இமாத் வாசிம் (742 புள்ளிகள்) முதலிடத்தில் உள்ளார். இந்திய வீரர் ஜஸ்பிரித் பும்ரா (737 புள்ளிகள்) ஓர் இடம் ஏற்றம் கண்டு 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். தென்னாபிரிக்க வீரர் இம்ரான் தாஹிர் (719 புள்ளிகள்) ஓர் இடம் பின்தங்கி 3ஆவது இடம் பெற்றார். (ஐ)



# ‘ஓவியா சாறி’ விளம்பரத்தில் ரைசா

‘பிக்பாஸ்’ வீட்டுக்குள்ளிருந்து வெளியேறுபவர்கள் ஒவ்வொருவரும் நட்சத்திரங்களாக மின்ன ஆரம்பித்துள்ளனர்.

அந்த வரிசையில் தற்போது ரைசாவும் இடம்பிடித்துள்ளார்.

அவர் தற்போது ஒரு புடவைக்கடை விளம்பரத்தில் நடித்துள்ளார். அதில் சில்லுன்னு ஒரு காதல் படத்தில் சூர்யா - ஜோதிகாவின் மகளான நடித்த ஸ்ரேயாவும் நடித்துள்ளார்.

இந்தப் புடவை விளம்பரத்தில் ‘ஓவியா சாறி’ என்ற புதிய சாறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ‘பிக்பாஸ்’ வீட்டுக்குள் ஓவியாவும், ரைசாவும் அவ்வப்போது சண்டை போட்டுக்கொண்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# உண்மை வெளிவரும்



இலங்கைக் கிரிக்கெட் வீரரான சாமர சில்வாவுக்கு விதிக்கப்பட்ட தடை குறித்து இலங்கை அணியின் முன்னாள் வீரரான மஹேல ஜெயவர்த்தன சாடியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கையின் உள்ளூர் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் தொடரின் ஒரு போட்டியில் பாணந்துறை அணியும் களுத்துறை அணியும் மோதின.

இந்தப் போட்டியில் விளையாடிய இரு அணி வீரர்களும் ஏதோ கடமைக்காக விளையாடுவது போன்றும், தவறான வகையிலும் விளையாட்டை வெளிப்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதையடுத்து இரு அணிகளுக்கும் தலைமை வகித்த அணித்தலைவர்களாக இரந்த சாமர சில்வா மற்றும் மனோஜ் தேசப்பிரியவுக்கு, இலங்கைக் கிரிக்கெட் சபை இரு ஆண்டுகள் விளையாடத் தடைவிதித்தது.

தற்போது இதுகுறித்த தனது கருத்தை ருவிட்டரில் வெளியிட்டுள்ள மஹேல ஜெயவர்த்தன, “நான் சேர்ந்து விளையாடிய நேர்மையான வீரர்களுள் சாமர சில்வாவும் ஒருவர். அவர் மீதான தடை குறித்த உண்மை விரைவில் வெளிவரும்” எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# ருவிட்டரில் குழப்பிய கௌதம் மேனன்



கௌதம் மேனன் படங்களில் நடிக்கப் பலரும் விரும்புவார்கள். தற்போது அவர் இயக்கும் ‘துருவ நட்சத்திரம் படத்தில் விக்ரம் நடித்துவருகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு யோர்ஜியா நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில், கௌதம் மேனன் தனது ருவிட்டர் பக்கத்தில் ஒரு சில புகைப்படங்களைப் பதிவுசெய்து, சில கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.

இதில் ‘நீங்கள் விரைவில் துருவாவைப் பார்க்கலாம் அல்லது யோகனாகக் கூட இருக்கலாம்’ என்பது போல் அவர் ருவிட் செய்ய, ‘யோகன்’ என்ற பெயரில் விஜயை வைத்து கௌதம் எடுப்பதாக இருந்த படமாச்சே? ஏன் இந்தப் படத்தைக் குறிப்பிடுகின்றார் என ரசிகர்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். (ஐ)

# ஒன்றிணைந்த எதிரணியின் அறுவருக்கு பிடியாணை

ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர், பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட ஆறுபேருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பூகொடை நீதவான் நீதிமன்றத்தால், இந்தப் பிடியாணை, நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது. கொழும்பு நகர சபையின் ஊடாக, கொழும்பு நகரத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை, கிரிந்திவெல மாளிகாவத்த குப்பை முகாமைத்துவ மத்திய நிலையங்களுக்குக் குப்பை லொறிகள் மூலமாக எடுத்துச்சென்ற போது, அவற்றுக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழே, அறுவருக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பிலான வழக்கு, பூகொடை நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றது. வழக்கு விசாரணையில் ஆஜராகாமையை அடுத்தே, அந்த அறுவருக்கும் பிடியாணை பிறப்பிக்குமாறும், அவர்கள் அறுவருக்குப் பிணை வழங்கிய பிணையாளர்கள் அறுவரையும் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நோட்டீஸ்அனுப்பிவைக்குமாறு, பூகொடை நீதிமன்ற நீதவான் நிலுபுலி லங்காபுர கட்டளையிட்டார். (உ)



## அனுகூலங்களைப் பெற திறந்த பொருளாதாரமே சிறந்தது

உலகப் பொருளாதாரத்தின் அனுகூலங்களைப் பெற வேண்டுமானால் திறந்த பொருளாதாரம் வேண்டுமென்பது முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கோட்பாடாக இருந்தது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் 111வது ஜனன தின நிகழ்வு கொழும்பு ஜே.ஆர். ஜெயவர்த்தன மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இலங்கையை ஆசியாவின் பொருளாதாரக் கேந்திர நிலையமாக மாற்ற அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தன திட்டம் வகுத்திருந்தார். ஆனால் யுத்தத்தின் காரணமாக அவரது இலக்குகளை அடைய முடியவில்லை. அவர் 1977ஆம் ஆண்டில் ஏற்படுத்திய பொருளாதார மலர்ச்சி இலங்கையில் துரித அபிவிருத்திக்கு வித்திட்டது. அவரின் அபிவிருத்தித் திட்டங்களில் மகாவலி திட்டத்தை விரைவாகப் பூர்த்தி செய்தமை, ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டையை தலைநகரமாக அபிவிருத்தி செய்தமை போன்றவை பாராட்டத்தக்கவை என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (உ)

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அத தெரண

## ரயில் உத்தியோகத்தர்களுக்கு கைத்துப்பாக்கிப் பயிற்சி

ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு கைத்துப்பாக்கி பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இதற்கென தெரிவுசெய்யப்பட்ட ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு கைத்துப்பாக்கிகளை இயக்குவது குறித்து பயிற்சிகள் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. நாள் ஒன்றுக்கு ஐம்பது பேர் என்ற அடிப்படையில் சுமார் 200 உத்தியோகத்தர்களுக்கு கைத்துப்பாக்கி பயிற்சி வழங்கப்பட உள்ளது. களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் இந்த பயிற்சி வழங்கப்படுகின்றது. இதற்கு முன்னர் 100 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட உள்ளது. (உ)

## மகனை அரசியலுக்கு கொண்டுவரவில்லை



தனது மகன் விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்கு கொண்டு வரும் நோக்கம் தனக்குக் கிடையாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். "எனது மகன் விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்குள் நுழைவதற்கு நான் ஊக்குவிப்பதாக சில சமூக ஊடகங்களிலும், இணையங்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன. எனது மகனையோ, மகளையோ நான் அரசியலுக்குத் தயார்படுத்தவில்லை. அரசியல்வாதிகளை நான் தெரிவு செய்ய முடியாது. மக்கள் தான் தெரிவு செய்கிறார்கள்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## விமலின் கட்சி மைத்திரிக்கு கடிதம்

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலத்தைக் கைவிடுமாறும், அரசமைப்பு நிர்ணய சபையின் இடைக்கால அறிக்கையை அங்கீகரிக்க வேண்டாம் எனக் கோரியும் விமல்வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளது. பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து சகல ஆட்களையும் பாதுகாக்கும் சர்வதேச சமவாயச் சட்டமூலமானது படையினரைப் பலிக்கடாவாக்கும் நோக்கிலேயே கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த கடிதத்தில், அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அது ஜனநாயகத்துக்கு எதிரான செயலாகவே கருதப்படும். எனவே, அதை நிறைவேற்றும் முயற்சியைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். காணாமல்போனோர் தொடர்பிலான சர்வதேச சமவாய சட்டமூலத்தில் கையொப்பமிட்டு அதை அமுல்படுத்துவதிலிருந்து 54 உலக நாடுகள் பின்வாங்கியிருக்கின்றன. எனினும், மேற்படி பிரகடனத்தில் இலங்கை கையொப்பமிட்டுள்ளது. ஆகவே, இந்த சட்டமூலமானது இலங்கைக்கு அச்சுறுத்தலாகவே அமையும். இது படையினருக்குப் பாதகமாகவும் அமையுமென்பதால் அதை விவாதிக்கவேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கின்றோம். - என்றுள்ளது. (உ)

## கண்டியில் தொடரும் கைதிகள் போராட்டம்

கண்டி போகம்பரை - தும்பர சிறைச்சாலையில் மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் முன்னெக்கும் போராட்டம் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுகிறது. சுமார் 60 கைதிகள் கடந்த 14ஆம் திகதி முதல் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தமக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைகள் குறைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதாக சிறைச்சாலைகள் திணைக்கள பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார். (உ)

## உலக நாடுகள் தலைவர்கள் கூட்டத்தில் மைத்திரி பங்கேற்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுக்கூட்ட அமர்வில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உலக நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார். அமெரிக்க ஜனாதிபதியின் இணை அனுசரணையுடன் இந்த உலக நாடுகளின் தலைவர்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் ஐக்கிய நாடுகள் மறுசீரமைப்பு பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதேவேளை, ஐ.நா. செயலாளர் நாயகம் அன்தோனியோ குத்தரெஸ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை இடம்பெறும். (உ)

## ஏழு மாதத்தில் 16 ஆயிரம் பேருக்கு நாய்க்கடி

கடந்த ஜனவரி தொடக்கம் ஜூலை வரையான காலப் பகுதிக்குள் நாடு முழுவதிலும் இருந்து 16 ஆயிரம் பேர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளனர். நாட்டின் 18 மாவட்ட மருத்துவமனைகளில் இதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதியில் நாய்க்கடி காரணமாக இரண்டு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இலங்கையில் ஆண்டுதோறும் மாவட்ட விசர் நாய்க்கடி தடுப்புப் பிரிவுகளின் மூலம் 5700 நிலையங்களில்ஒரு லட்சத்து 60 ஆயிரம் நாய்களுக்கு தடுப்பு ஊசி போடப்படுவதாக விசர் நாய்க்கடி தடுப்புப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். மேலும், நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற வரும் நபர்களுக்கு நிலைமையின் தன்மைக்கேற்ப அவர்களின் சிகிச்சைக்காக இரண்டாயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரையான செலவு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதாரத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ)

## நாளை நாளும் கோளும்

21.09.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 04 ஆம் நாள்

அமாவாசை மு.ப. 11.23 வரை | உத்தரம் பி.இ. 12.16 வரை | அமிர்தசித்தயோகம் | வல்லிபுரஆல்வார் கொடி

இராகுகாலம் 12.03 - 01.33 | சுபநேரம் 04.33 - 06.03 | எமகண்டம்07.33 - 09.03

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மை | உயர்வு | வீண்செலவு | பாராட்டு | நலம் | இன்பம் | அசதி | பக்தி | இலாகம் | ஆக்கம் | நலம் | உற்சாகம் |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்......!



**1658.09.19**

யாழ்ப்பாணத்தில் ரோமன் கத்தோலிக்க மத குருமாரை மறைத்து வைத்திருப்பது மரணதண்டனைக் குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.



## சுவிஸ் அதிகாரிகள் சிறிதரனுடன் பேச்சு

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மற்றும் சுவிஸ் நாட்டு உயர் அதிகாரிகள் குழு ஒன்றுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது சமகால அரசியல் நிலமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றமை, அவர்கள் மீது இலங்கை அரசாங்கமும், அரச படைகளும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்ற சம்பவங்கள் தொடர்பிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம், மற்றும் காணி சுவீகரிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## தமிழக மீனவர்கள் 8 பேர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது

நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் எட்டுப் பேரை, இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளதாக தமிழக செய்திகள் தெரிவித்துள்ளன. ஜெகதாபட்டினத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற எட்டு மீனவர்களையும், அவர்களது இரண்டு விசைப்படகுகளையும், இலங்கைக் கடற்படையினர் இன்று அதிகாலை கைது செய்துள்ளனர். அவர்கள் அனைவரும் விசாரணைக்காக காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைக்குப் பின், அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர். ஏற்கெனவே, இலங்கைச் சிறையில் 19 மீனவர்கள் உள்ள நிலையில், இன்று மேலும் எட்டு மீனவர்கள் சிறை பிடித்துச் செல்லப்பட்டிருப்பது, தமிழக மீனவர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ)



## சமுர்த்திப் பயனாளிகள் ஆர்ப்பாட்டம்

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் 36 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி பயனாளிகள் இன்று காலை ஆர்ப்பாட்டமொன்றினை மேற்கொண்டுள்ளனர். வாழ்வின் எழுச்சி திட்ட பயனாளிகள் பலரது சமுர்த்தி கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டதோடு, குறித்த பயனாளிகளின் பெயர் விபரங்கள் நீக்கப் பட்டமையைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 1981 குடும்பங்கள் வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் ஊடாக சமுர்த்தியை பெற்றுக் கொண்ட நிலையில் அதில் தற்போது சுமார் 900 வாழ்வின் எழுச்சித் திட்ட பயனாளிகளின் உதவித்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களின் பெயர் விபரங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு, அவர்களுக்கான சமுர்த்தி கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வாழ்வின் எழுச்சித்திட்ட பயனாளிகள் தம்மை பட்டியலில் இருந்து நீக்கியதை கண்டித்து போராட்டத்தினை மேற்கொண்டுள்ளனர். (உ)

## பொலிஸார் எதிர்ப்பால் நிதி சேகரிப்பில் முறுகல்

சில் துணி விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அனுசிய பெல்பிட்ட ஆகியோருக்காக பௌத்த குருமார் நிதி சேகரித்து வருகின்றனர். இந்நிலையில் இன்று காலை களனி பிரதேசத்தில் பௌத்த குருமார் பேரணியானது ஆரம்பமானபோது அவ்வாறு நிதி சேகரிக்கும் பேரணியை நடத்த முடியாது என பொலிஸார் நீதிமன்றத்தடை உத்தரவை காண்பித்து இடைமறித்தனர். எனினும் வீதியில் நின்றிருந்த பொது மக்கள் நிதிகளை வழங்குவதற்கு முனைந்த போது அதனைத் தடுக்கும் செயற்பாடுகளையும் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் முறுகல் நிலைமைகள் எழுந்தன. குறிப்பாக பொலிஸார் இதனை தடுக்கு முடியாது என பொதுமக்கள் கோசங்களை எழுப்பி கூச்சலிட்டனர். எனினும் பொலிஸார் தொடர்ந்தும் தடைகளை விதித்த போதும் பௌத்த குருமார் தமது பேரணியை விடாது தொடர்ந்தனர்.

மக்களும் உதவித் தொகைகளை வழங்கியவண்ணமே இருந்தனர். இதனால் பதற்றமான நிலைதொடர்ந்து கொண்டிருக்கையில் அவ்விடத்திற்கு வருகைதந்திருந்த சிசிர ஜெயக்கொடி எம்.பி.யும் பொலிஸாருக்கு எதிராக விமர்சனங்களையும் முன்வைத்திருந்ததோடு தொடர்ச்சியான நிதிசேகரிக்கும் பேரணியை முன்னகர்த்திச் செல்வதற்கும் துணை புரிந்திருந்தார். (உ-09)

## விபத்தில் ஒருவர் பலி மற்றொருவர் படுகாயம்

அக்கரைப்பற்று, அம்பாறை பிரதான வீதி 2ஆம் கட்டையில், நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக, அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் இறக்காமம், 2 சபா நகர், 8ஆம் கட்டை கிராமத்தைச் சேர்ந்த, 46 வயதுடைய அப்துல் மஜீத் அலியார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை படுகாயமடைந்தவர் அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக, வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன. (உ)

## மன்னார் விபத்தில் ஒருவர் பலி!

மன்னார் வீதியிலுள்ள கட்டை கடும்பன் பாடசாலை முன்பாக ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இன்று காலை எதிரெதிரே பயணித்த வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

ஹன்டர் மற்றும் பிக்கப் வாகனமே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதுதொடர்பான விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பயங்கரவாத...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒத்திவைக்கப்படுவதாக இருந்தால் அது இரண்டு வாரங்களுக்கு மேற்பட்டதாக இருக்காது என்றும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த வழக்குகள் விரைவாக முடிவுக்கு வரும்." என்றும் அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். (எ)

**குண்டர் சட்டம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்ந்து, அவர்கள் மீது குண்டர் சட்ட வழக்கும் பதிவுசெய்யப்பட்டது. அரசின் நடவடிக்கையை எதிர்த்து, குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டது செல்லாது என்று அறிவிக்கக்கோரி, பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், திருமுருகன் காந்தி உள்ளிட்ட நால்வர் மீதான குண்டர் தடுப்புச் சட்ட நடவடிக்கையை இரத்துசெய்து உத்தரவிட்டது. (எ)

**காணாமல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
"பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை நடந்த ஐதேகவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க் புறப்பட முன்னர், கூட்டு எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். இதன் போது, பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் சர்வதேச பிரகடனம் தொடர்பான விவாதம் நடத்தப்படாது என்று ஜனாதிபதி தம்மிடம் உறுதியளித்திருந்தார் என்று தினேஸ்குணவர்த்தன தகவல் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

**கலைகிறது...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆளுநரின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கும் என அறிய வருகின்றது. அரசியல் அமைப்பின் 2ஆவது திருத்த சட்ட மூலம் தோல்வி கண்டு விட்டது அதனால் தேர்தலுக்கு அரசு செல்ல வேண்டிய கட்டாய நிலை வந்துள்ளது.

புதிய தேர்தல் முறையின் கீழ் ஒன்பது மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்தப்போவதாகக் காரணங்காட்டி பதவிக்காலம் முடிவடையவுள்ள கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசு ஒத்திவைக்கத் தீர்மானித்திருந்தது.

ஒன்பது மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் புதிய முறைப்படி ஒரே தினத்தில் நடத்துவதே உசிதம் எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த பிரேரணையின் அடிப்படையிலேயே அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. எனினும் பொது எதிரணி கடுமையான ஆட்சேபத்தை தெரிவித்துள்ளது. இந்நிலையில் 20 ஆவது திருத்தத்தை கைவிட முடிவு செய்த அரசாங்கம் புதிய திருத்தம் ஒன்றைக் கொண்டுவர முயற்சித்துள்ளது. அந்நிலையில் பதவிக்காலம் முடிவடையும் கிழக்கு உள்ளிட்ட மாகாணசபைகளைக்கலைத்து அவற்றை ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக தெரியவருகின்றது. (எ)

**அரசியல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த பிரிவுகளை ஒப்பங்கோடல் மற்றும் நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்று மாறும் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 19.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.